முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

அசல் வழக்கு எண். 25/2023

நாள் : 01.02.2025

பி.வா.சா.1 திரு.மதிவாணன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது பாட்டி காளியம்மாள் என்னுடன் எத்தனை ஆண்டுகளாக வசித்துவந்தார் என்றால் எனக்கு விவரம் தெரிந்த காலம் முதன் என்னுடன் எனது வீட்டில் வசித்து வந்தார். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 உயில் எழுதப்பட்ட காலத்திலும் மேற்படி காளியம்மாள் எனது வீட்டில்தான் இருந்தார் என்றால் சரிதான். எனது தாத்தாவின் சொந்த ஊர் சம்பை கிராமம் ஆகும். எனது பாட்டிக்கு உயில் எழுதும் காலத்தில் செய்யப்பட்ட கண் சிகிச்சைக்கான செலவுகளை நான்தான் செய்தேன். எனது தாத்தா என் வீட்டில்தான் இறந்தார். பி.வா.சா.ஆ.2 உயில் எழுதிய ஓர் ஆண்டுக்கு பின்பு எனது பாட்டி காளியம்மாள் பி.வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் பத்திரம் எழுதப்பட்டுள்ளார். எனது தாத்தா நாகமுத்து 2005ம் ஆண்டு இறந்தார். நாகமுத்துவிற்கும் காளிமுத்துவிற்கும் பிறந்தவர்கள்தான் எனது அப்பாவும், வாதிகளும் என்றால் சரிதான். நாகுமுத்து இறந்தபோது இறுதி சடங்குகளை என் அப்பாவும், வாதிகளும் சேர்ந்து செய்தார்கள் என்றால் வாதிகள் வரவில்லை.

எனது பாட்டி காளியம்மாள் என்னுடன் எனது வீட்டில் வசித்து வந்தார் என்பதை காட்டுவதற்கான ஆதாரமான குடும்ப அட்டை என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் அதை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. என் உடன்பிறந்தவர் ஒரே அக்கா அவர் பெயர் கௌரிசுதா, அவர்தான் பி.சா.ஆ.2 உயில் பத்திரத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். பி.சா.ஆ.3 செட்டில்மெண்ட் பத்திரத்திலும் அவர்தான்

சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். என் பாட்டி நான் கூறுவதுபோன்று என்னுடன் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. என் பாட்டி தனியாகத்தான் வசித்துவந்தார் என்றும், வாதிகளும் அவர்களை கவனித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று, என் பாட்டி நீண்டகாலமாக என்னுடன் வசித்து இருந்தால், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றும், அவ்வாறு வசிக்கவில்லை என்பதால்தான் ஆவணங்களை எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 உயில் எழுதும் போது வாதிகள் யாரும் உடன் இருந்தார்களா என்றால் இல்லை. எனது சகோதரி கௌரிசுதாதான் உடன் இருந்தார் என்றால் 4–5 பேர் இருந்தார்கள். யார்யார் என்று தெரியவில்லை.

நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து அதற்கு முன்னதாக எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2 உயில் மற்றும் பி.சா.ஆ.3 செட்டில்மெண்ட் பத்திரம் ஆகிய ஆவணங்களில் எனது பாட்டி தற்சமயம் தேவிப்பட்டிணத்தில் வசித்து வருவதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதற்குரிய ஆதார ஆவணங்கள் எதுவும் அந்த பி.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களுடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி காளியம்மாள் என்னுடன் வசிக்கவில்லை என்றும், வசித்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல.

பி.சா.ஆ.2 உயிலில் காட்டப்பட்டுள்ள சொத்து, பி.சா.ஆ.3 செட்டில்மெண்ட் பத்திரம் காட்டப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணத்தின் சொத்தானது தாத்தா நாகமுத்துவின் கிரைய சொத்து ஆகும். எனது தாத்தா எப்பொழுது இறந்தார் என்று என் எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால்

சரிதான். அவர் தனது சொத்து குறித்து கிரையமோ, உயிலோ, எந்த ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான்.

நாகமுத்துவின் வாரிசுகளுக்கு கிடைக்க வேண்டிய சொத்தை என் பெயரில் மட்டும் பட்டா மாறுதல் செய்ய மற்றவர்களுக்கு தெரியாமல் முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. எனது பாட்டி காளியம்மாள் மட்டும்தான் முழு சொத்துக்களையும் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார். அவருக்கு முழு சொத்திலும் எப்படி பாத்தியம் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணம் உயில் எழுதப்பட்ட பின்புதான் எழுதப்பட்டது. ஆனால் அதில் உயிலை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2 உயில் மற்றும் பி.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணங்களில் என் அப்பாவின் மற்ற வாரிசுகளை பற்றி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவிற்கும், அவரது சகோதரிகளான வாதிகளுக்கும் சுயசம்பாத்திய சொத்து எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

எனது தாத்தாவும், பாட்டியும் இலங்கையில் வாழ்ந்து, எனது அப்பாவும் அவரது சகோதரிகளான வாதிகளும் சிறுகுழந்தைகளாக இருந்த போது இந்தியா வந்தார்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ.6 பட்டா மாறுதல் விசாரணை அறிவிப்பு எனக்கு மட்டும்தான் வந்தது என்றால் சரிதான். வேறு யாருக்கும் அந்த அறிவிப்பு அனுப்பவில்லை. பாட்டா மாறுதல் சம்மந்தமாக வாதிகளையோ, வேறு வாரிசுகளையோ விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் எனது செல்வாக்கை வைத்து பட்டா மாறுதல் விசாரணைக்கு மற்ற வாரிசுகளுக்கு அனுப்பாமல் இருப்பதற்கு முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு தனிப்பட்டா எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஒரே ஒரு வீட்டுவரி ரசீது மட்டுமே பி.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளேன். அந்த ரசீதில் எந்த சொத்திற்குரியது என்று இல்லை என்றால் சரிதான்.

நான் வாதிகளுக்கு தெரியாமல் வாதிகளுக்கு தெரியாமல், என் சகோதரியின் உதவியுடன் உயில் மற்றும் செட்டில்மெண்ட் பத்திரங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உயில் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதும் போது எனது பாட்டி காளியம்மாள் நல்ல உடல்நிலையில் இல்லை என்றும், அவருக்கு கண் பிரச்சனையினால் எழுதப்படிக்க முடியாது என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களில் உள்ள புகைப்படங்கள் எனது பாட்டியின் புகைப்படங்கள் இல்லை என்றால் சரியல்ல. எனது பாட்டியின் அடையாளத்திற்கோ, முகவரிக்கோ எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பாட்டியின் வயது 80 ற்கு மேல் என்பதால், அதை பயன்படுத்தி அவருக்கு தெரியாமலேயே பி.சா.வா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களை நான் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்தானது எனது பாட்டி காளியம்மாளுக்கு அவரது தாயார் மாரியாயி என்பவரது உயில் மூலம் பாத்தியம் பெற்ற சொத்தும் என்றும், அதில் எனது தந்தை மற்றும் வாதிகள் உட்பட அனைத்து வாரிசுகளுக்கும் பிரிக்கப்படவேண்டிய சொத்தாகும் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உயில் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு 3/5 பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/–ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .